விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 015 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### உள்ளூராட்சித் தேர்தல்

## திருத்தச் சட்டம்

## இரு வாரத்தில் சபையில்



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் இன்னும் இரண்டு வாரங்களில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளது.

*(02 பக்கம் பார்க்க)*

### கிளிநொச்சி புளியம்பொக்கணை

## பாலத்தடியில் இரு சடலங்கள் மீட்பு

### புனரமைக்கப்படாத பாலத்தால் விபத்து எனச் சந்தேகம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புளியம்பொக் கணை பாலத்துக்கு அடியில் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த வர்களான அன்ரன் சாந் தன் (வயது-23) மற்றும் 15

### அநுராதபுரத்தில் கணவனால்

## எட்டு மாத கர்ப்பவதி அடித்துப் படுகொலை

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் இளம் கர்ப்பவதியை கணவன் கொடூர மாகக் கொலை செய்துள்ளார்.

பதவியாப் பகுதியைச் சேர்ந்த 27 வயதான ருவந்தி மங்க லிகா என்ற எட்டு மாதக் கர்ப்பவதித் 16

### அல்வாயில்

## இளைஞனின் சடலம் மீட்பு

(கரணவாய்)

அல்வாய் வதிரியில் இளை ஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதி 15

### கிளிநொச்சியில் டிப்பர் விபத்து

## படுகாயமடைந்த தாயும் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம் பெற்ற டிப்பர் விபத்தில் படு காயமடைந்த தாயும் உயிரிழந்துள்ளார். 15

### இக்கட்டான நிலையில் பொருளாதாரம்

# கடின முடிவுகளை எடுக்க நேரிடும்

### அமைச்சர் விஜித ஹேரத் எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் இக்கட்டான நிலையில் உள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் கடினமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்று அமைச்சர் விஜித ஹேரத் எச்சரித்துள்ளார்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

### சாவகச்சேரி கிராம்புவில்

## கிணற்றிலிருந்து அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம்பு வில் பகுதியில் உள்ள வயல் கிணறொன்றிலிருந்து நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வயோதிபப் பெண் ஒருவருடைய சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. 15

## வவுனியா பொருளாதார மத்திய நிலையம் தனிப்பட்ட நலனால் திறக்க முடியாதுள்ளது

### பிரதி அமைச்சர் உபாலி

(வவுனியா)

தனிப்பட்ட நலனை முன் னிறுத்தியமையால் வவுனியா பொருளாதார மத்திய நிலை யத்தினை திறக்க முடியாமல் உள்ளதாக வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலை வரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித் தார்.

நேற்று மாவட்டச் செயலகத் தில் இடம்பெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்திலே பொருளா தார மத்திய நிலையம் தொடர்பாக கலந்து 16

### யாழ்.நீதிமன்றம் முன்னால்

## சாட்சியை வெட்ட முயன்ற சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத் தில் உள்ள வழக்கு ஒன்றுக்கு சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த பிரதான சந்தேகநபர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். 15

### யாழில் விபத்துத் தொடர்பான வழக்கு

## சடலத்தைத் தோண்டுமாறு நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழில் விபத்துத் தொடர் பான வழக்கொன்றில் உயிரி ழந்து அடக்கம் செய்யப்பட்ட வரின் சடலத்தைத் தோண்டு மாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தில் விபத்து தொடர்பான வழக்குகிலுள்ள நப 15

## பளையில் கஞ்சாவுடன் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பளை - தம்ப காமம் பகுதியில் கஞ்சா போதைப்பொருளு டன் இரண்டு சந் 16

## சுகாதாரத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

வரலாற்றில் முதன்முறை யாக வரவு செலவுத் திட்டத் தில் சுகாதாரத்துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சுகா தார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சனசமூக நிலையத்தின் முன்னைநாள் உறுப்பினர் **திருவருள் செல்வன்** அவர்களின் மாமியாரும் சமூக சேவையாளருமாகிய

**அமரர் விஸ்வலிங்கம் மங்கயற்கரசி**

மண்ணில் 31.08.1946 விண்ணில் 04.12.2024

அவர்கள் கடந்த 04.12.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று 03.01.2025 வெள்ளிக்கிழமை அன்னாரின் 31 ஆம் நாள் நினைவில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2901)

விக்னேஸ்வரா வீதி,
தையிட்டி கிழக்கு,
காங்கேசன்துறை.

கலாவல்லி சனசமூக நிலையத்தினதும்,
முன்பள்ளியினதும், நிர்வாகத்தினர்
மற்றும் உறுப்பினர்கள்

## சுகாதார...

வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.மஹரகம அரச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது மற்றும் ஒரே எலும்பு மஜ்ஜை மற்றும் இரத்த அணு மாற்று சிகிச்சைப் பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று வியாழக்கிழமை (02) கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சுகாதார அமைச்சகம் என்பது பொதுவாக எந்த அரசாங்கமும் கேட்கும் பணத்தை கொடுக்கும் இடமாகும். வரலாற்றில் சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட அதிகூடிய தொகை இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு வெளிநாட்டு சர்வதேச அமைப்புகளின் ஆதரவை உள்ளூர் தூதுவர்கள் மூலமாகவும் நமது அமைச்சகத்தின் மூலமாகவும் பெறுகிறது.தற்போது நாம் ஏற்பாடுகள் அனைத்தையும் முறையாகவும், திட்டமிட்டதாகவும் பயன்படுத்த வேண்டும். எதிர்வரும் காலங்களில், அரசியல் தேவையின் அடிப்படையிலோ, வைத்தியசாலைக்குச் சென்றபின் மனதில் எழும் உணர்வு பூர்வமான எண்ணங்களின் அடிப்படையிலோ எவருக்கும் உதவ முடியாது என்றார். (ம-7)

## திருத்த...

குறித்த சட்டமூலம் வர்த்தமானிக்காக அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்புமனுக்களை மீளப்பெறுவதற்கு இந்தத் திருத்தங்கள் ஊடாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

புதிய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முக்கிய நோக்கத்துடன் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்தத் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது. (ம-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 06.12.2024 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

**பாக்கியம் முத்துலிங்கம்**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு உடனிருந்தோர், நேரடியாக, தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பதாதைகள் வாயிலாக அஞ்சலி செலுத்தியோர், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோர், ஏனைய அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு.

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் மதியம் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இடம்பெறும்.

தாங்கள் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லையம்பதி,
துன்னாலை.

(C-1930)

தகவல் :
குடும்பத்தினர்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2025
## பழைய மாணவர் சங்கம்
## யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

காலம் - 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - மு.ப 09.30 மணி
இடம் - அருணாசலம் மண்டபம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தயவாக வேண்டிக்கொள்கின்றேன்.

குறிப்பு - 2025 ம் ஆண்டிற்குரிய சங்க நிர்வாகத்திற்குரிய பதவியணியினரின் வேட்புமனு விண்ணப்பங்களை கல்லூரியில் அதிபர் அலுவலகத்திலும் மற்றும் www.chcosa.org என்ற பழைய மாணவர் சங்க இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்.
பழைய மாணவர் சங்கம்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(503)

## மரண அறிவித்தல்

மலர்வு 09 - 12 - 1955



உதிர்வு 31 - 12 - 2024

**சின்னப்பு பிரேமநாதன்**

(ஓய்வு பெற்ற முகாமையாளர் - ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பிரேமநாதன் அவர்கள் 31.12.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பொன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் மங்களேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் மயூரனி, கஜீபன், ரேனோஷா, கம்சுதன், வேணுஜா, லினோஜா ஆகியோரின் தந்தையும் தனன்சயன், சேந்தன் ஆகியோரின் மாமனாரும் கயல், எயினி, தியா ஆகியோரின் பேரனும் சத்தியவிமலாதேவி, சமரக்கொடி, அமரர் சத்தியேஸ்வரன், அமரர் சற்குணராணி, கமமேஸ்வரி, அபூர்வசூர்யா ஆகியோரின் சகோதரனும் அமரர் தம்பித்துரை, சிவபாதம், குகநேஸ்வரன், ஸ்ரீபவானி ஆகியோரின் மைத்துனரும் நாகேஸ்வரி, அமரர் தனபாலசிங்கம், கணேசலிங்கம், குமாரசிங்கம், சிவனேஸ்வரி, மகேஸ்வரி, மகேந்திரன், துரைசிங்கம், புலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பேக்கரி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(C-1933)

தகவல் : குடும்பத்தினர்
077 112 4034

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைப்பாடுகளைத் தெரிவிக்க புதிய செயலி அறிமுகம்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்கள் பதிவு செய்வதற்காக "இ-டிராஃபிக்" என்ற கையடக்கத் தொலைபேசி செயலி பொலிஸாரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

க்ளீன் ஸ்ரீலங்கா- 2025 திட்டத்திற்கு இணையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து இந்தச் செயலியை இலகுவாகத் தரவிறக்கம் செய்ய முடியும். அந்தச் செயலி மூலம் பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை உடனடியாக முன்வைக்க முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்குப் பொதுமக்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் "இ-டிராஃபிக்" என்ற கையடக்கத் தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (நி)

# போதியளவு உப்பு கையிருப்பில்

(கொழும்பு)

நாட்டில் போதியளவு உப்பு கையிருப்பில் இருப்பதனால் அதனை இறக்குமதி செய்யத் தேவையில்லை என இலங்கை உப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் நிசாந்த சந்தபரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

உப்பு தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்பட்டால் உப்புக்கு தட்டுப்பாடு இருக்காது.

சரியான திட்டங்களை வகுத்தால் உப்பை ஏற்றுமதி செய்ய முடியும் என இலங்கை உப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் நிசாந்த தெரிவித்துள்ளார். (நி)

# 63 பொருட்களுக்கான இறக்குமதி வரியில் திருத்தமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட 63 பொருட்களுக்கான இறக்குமதி வரியை எந்தத் திருத்தமும் இல்லாமல் பராமரிக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் 2024 டிசம்பர் 31 அன்று ஒரு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி பருப்பு, வெள்ளை சர்க்கரை, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், தேங்காய் எண்ணெய், தாவர எண்ணெய், டின் மீன் மற்றும் காய்ந்த மிளகாய் போன்ற பொருட்களின் மீதான தற்போதைய விகிதங்களைப் பராமரிப்பதன் மூலம் பொருட்களுக்கான விலை உயர்வைத் தடுக்க முடியும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அரிசி, தினை, பச்சைப்பயறு, சோளம், மஞ்சள், பழங்கள், மீன் மற்றும் கருவாடு போன்ற உணவுப் பொருட்களின் மீதான வரி விகிதங்களும் தக்க வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# முன்னாள் அரசியல்வாதியின் சட்டவிரோத வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

முன்னாள் அரசியல்வாதி ஒருவருக்கு சொந்தமானதாகக் கூறப்படும் 4.5 கோடி ரூபா விற்கும் அதிக பெறுமதியான மூன்று சொகுசு வாகனங்களை மத்திய ஊழல் தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த வாகனங்கள் பாணந்துறை பின்வத்த பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இராணுவ ஜீப் போன்ற வாகனம் ஒன்று காணப்படுவதாகவும் அது வெளிநாடுகளில் உள்ள ஆயுதப்படையினரால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரத்மலானைத் தொடருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள இடமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் இரண்டு சொகுசு ஜீப் வண்டிகளும் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக விசாரணையின் போது கிடைத்த தகவலின் அடிப்படையில் தெரிவிக்கப்படுகின்றது. (நி)





வைத்தியசேவை கடும்விலை போகும் இக்கால கட்டத்தில் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என உயிர்காக்கும் புனித பணியை தன் உயிரிலும் மேலாக மதித்து தாயகத்தின் சகல மட்ட மக்களுக்காகவும் அன்போடும் அரவணைப்போடும் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் ஐயா காந்தநேசனே உம்மை வாழ்த்தி வணங்குகின்றோம். நல் மனையாளோடும் அன்புச் செல்வங்களோடும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம். வாழ்க வளமுடன்.

வாழ்த்துவோர் :
பொதுமக்கள், வைத்தியசாலை நிர்வாகம்,
நோயாளர் நலன்புரிச் சங்கம்
மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை, ஆனைக்கோட்டை.


# சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு



(கொழும்பு)

சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு ரூபா 7,500 இல் இருந்து 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது. பிரதேச செயலக மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 47,244 சிறுநீரக நோயாளர்கள் ஏற்கனவே இதே கொடுப்பனவைப் பெற்று வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறுநீரக நோயாளர் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள விளம்பரங்கள் முற்றிலும் பொய்யானது எனவும், சிறுநீரகக் கொடுப்பனவு, அஸ்வசும, உரமானியம், மீன்பிடி மானியம் என்பன செலுத்தும் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# வெங்காயத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

வெங்காயத்தை இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் படி 20,000 மெற்றிக் தொன் வெங்காயத்தை முதற்கட்டமாக இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அதன் தலைவர் ரவீந்திர பெர்ணான்டோ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கான விலை மனுக்கோரல் இன்று நிறைவடைகிறது.



தற்போது சந்தையில் வெங்காயத்துக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ள காரணத்தால் இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் 30 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2025

## அனைத்துச் செயல்களையும் பொறுமையுடனும், நிதானத்துடனும் செய்வீர்கள்



**சுக்கிரனை ராசிநாதனாகக் கொண்ட ரிஷப இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டில் மனதைத் தெம்பாக வைத்துக் கொண்டால் எதையும் எதிர்கொள்ளலாம். உங்களின் வெளியூர் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் வலுப்படும். செலவுகள் அதிகரிக்கும் என்பதால் அவற்றை ஈடுகட்ட பழைய கடன்களை வசூலிப்பீர்கள். நீங்கள் விரும்பிய வீட்டிற்குக் குடிபெயர்வீர்கள். சுகபோக வசதிகளை அனுபவிப்பீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உடல் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். அனைத்துச் செயல்களையும் பொறுமையுடனும் நிதானத்துடனும் செய்வீர்கள்.

உங்களின் ஆலோசனைகள் உங்கள் நண்பர்களுக்குப் பயன்படும். புதிய முயற்சிகளில் இறங்கி அனுபவம் பெறுவீர்கள். சிரமம் பார்க்காமல் சாகசங்களில் ஈடுபடுவீர்கள்.

**குடும்பம்:** குடும்பத்தில் மற்றவர்களால் தேவையில்லாத வீண் கலகம் ஏற்படலாம். எந்தச் சூழ்நிலையிலும் அடுத்தவரை அனுசரித்துச் செல்வது உங்களுக்கு நன்மையைத் தரும். வாழ்க்கைத் துணையுடன் சிறு சிறு கருத்து வேறுபாடு உண்டாகலாம். குழந்தைகள், நண்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர் என அனைவரிடமும் பொறுமையைக் கடைபிடிப்பது அனுகூலம் தரும். உடல் பொலிவடையும். உங்களை ஏமாற்ற நினைக்கும் நண்பர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்வீர்கள்.

**பொருளாதாரம்:** அவ்வப்போது பணப்பிரச்சினைகள் வந்தாலும் குரு பகவானின் சஞ்சாரத்தால் அனைத்து பிரச்சினைகளையும் திறம்படச் சமாளிப்பீர்கள். உங்கள் இராசிநாதனே சுக்கிரனாக அமைவதால் எந்த பிரச்சினையும் தலைக்கு வந்தது தலைப்பகையுடன் சென்றது போல் கடந்து செல்வீர்கள். கடன் சார்ந்த விடயங்கள், முதலீடு சார்ந்த விடயங்கள் அனைத்திலும் அதிக கவனம் தேவை. வருமானம் சீராக இருக்கும்.

**ஆரோக்கியம்:** சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனால் உங்களின் செயல்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாமலும் போகும். நீரிழிவு நோய் மற்றும் கல்லீரல் நோய் போன்றவை உள்ளவர்கள் கூடுதல் கவனத்தோடு இருக்கவும். மது உள்ளிட்ட போதைப் பழக்கங்கள் உள்ளவர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டிய வருடம் இது.

**பெண்கள்:** பெண்கள் நன்கு யோசித்த பிறகே பிறரின் வார்த்தைகளை நம்புவீர்கள். கணவரிடமும் குடும்பத்தாரிடமும் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். எவரிடமும் மனம் திறந்து பேச வேண்டாம். உங்கள் கடமைகளைச் சரிவர ஆற்றவும்.

**உத்தியோகத்தர்கள்:** உத்யோகத்தர்களின் கோரிக்கைகளை மேலதிகாரிகள் உடனுக்குடன் பரிசீலிப்பார்கள். அலுவலகத்தில் அனுகூலமான சூழலைக் காண்பீர்கள். சக ஊழியர்கள் நட்புப் பாராட்டுவார்கள். இடையூறுகளை ஒரு பொருட்டாகவே கருதமாட்டீர்கள். பணவரவில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் எந்தக் குறையும் ஏற்படாது. விரும்பிய இட மாற்றங்களைப் பெறுவீர்கள். உங்கள் வேலைத்திறன் மேம்படும்.

**வியாபாரிகள்:** வியாபாரிகளின் திட்டங்கள் அனைத்தும் நல்ல லாபத்தைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் சிறப்புகள் உண்டாகும். விற்பனைப் பிரதிநிதிகளைப் பல சந்தைகளுக்கும் அனுப்பி உங்கள் விற்பனைக் களத்தைப் பரவலாக்குவீர்கள். ஆயினும் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே விரிவாக்கம் செய்யவும். மற்றபடி திறமையுடன் நீங்கள் செய்து வரும் வியாபாரத்தால் உங்கள் கௌரவமும் அந்தஸ்தும் உயரும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். எதிரிகளால் கஷ்டங்கள் உண்டாகாது என்றாலும் அவர்கள் மீது ஒரு கண் வைத்திருக்கவும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும். சச்சரவுகளில் சம்பந்தப்பட்டு மாட்டிக் கொள்ள வேண்டாம்.

**கலைத்துறையினர்:**

கலைத் துறையினர் கடினமாக உழைத்தால்தான் துறையில் வெற்றி வாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து விடுவீர்கள். உங்கள் திறமைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். அதே சமயம் உங்களின் வெளி வட்டாரப் பழக்க வழக்கங்களில் மிகவும் கவனத்துடன் இருக்கவும். சக கலைஞர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும்.




**மாணவர்கள்:** மாணவர்கள் கடினமாக உழைத்துப் படிப்பதன் மூலம் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். சிலருக்கு வெளியூர் சென்று கல்வி பயிலும் வாய்ப்பு கிடைக்கும். மனக்குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். தீய நண்பர்களுடனான நட்பைத் துண்டிப்பீர்கள். உள்ளரங்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு சாதனை செய்வீர்கள்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு பொருட்களின் விற்பனை மிகவும் நன்றாகவே இருக்கும். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மிகப்பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்திலிருந்து சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருக்கும்; செலவும் அதிகமாகும். சக ஊழியர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கையில் மேன்மை அடையக் கூடுதல் கவனத்துடன் உழைப்பது அவசியம்.

**ரோகிணி:** இந்த ஆண்டு வாகனங்களை உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகு முறையை கையாள்வது அவசியம். பணவரத்து அதிகரிக்கும். காரியத் தடங்கல்கள் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். நயமாகப் பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூவனமாகச் செயற்படுவது நல்லது.

**மிருகசிரீடம் 1,2 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு வேலை பார்க்கும் இடத்தில் பொருட்களை கவனமாகப் பாதுகாப்பாக வைப்பது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும். இஷ்ட தெய்வத்தை வழிபட கவலை குறையும். ஆன்மிக நாட்டத்தை அதிகரித்துக் கொள்வதன் மூலம் மனநிம்மதி ஏற்படும். உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கும். மனதுக்குச் சந்தோஷமான காரியங்கள் நடக்கும்.

**பரிகாரம்:** அருகில் இருக்கும் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று பெருமாளை தரிசனம் செய்து விட்டு வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி.

**அதிர்ஷ்ட எண்கள்:** 2, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்கழிவுகளை வீசிச் சென்ற வாகனம் தக்க பதிலடி கொடுத்த கிராம மக்கள்



(கம்பளை)

மீன் வியாபாரக் கடைகளில் இருந்து அகற்றப்படும் மீன் கழிவுகளுடன் வாகனம் ஒன்றை நேற்று முன்தினம் புதன்கிழமை கம்பளை அம்புலாவ பகுதியில் உள்ள இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மீன்கடை உரிமையாளர் ஒருவர் தனது கடையில் வெட்டிய மீன்கழிவுகளை வீதியோரக் காட்டுப்பகுதியில் வீசிவிட்டுச் சென்ற போது அதனை அவதானித்த அப்பிரதேசமக்கள் வாகனத்தினை மடக்கிப்பிடித்து அவர்கள் வீசிய மீன் கழிவுகளை அள்ளி வாகனத்திற்குள்ளே போட்டுள்ளனர். பின்னர் பொதுமக்கள் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஙி)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### பொன்னுச்சாமி நந்தகுமார்

(நந்தன் கோப்பி அன் கூல்பார் உரிமையாளர்

(K.K.S றோட், சுன்னாகம்)



அன்னை அடியில்
26.04.1968

ஆண்டவன் அடியில்
26.12.2022

(திதி-03.01.2025)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் - எம் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் ஒளி வீசும்
நீங்கள் எங்கள் எல்லோரையும்
விட்டு மறைந்து ஆண்டு
இரண்டு ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றென்றும்;
நிலையாக வாழ்ந்திடுவீர்கள்

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(502)

## மரண அறிவித்தல்

### திருமதி.கெங்காதேவி ஆனந்தகுமாரசுவாமி
### (காரிகாசிவதேவி)

மலர்வு 18.07.1935 — உதிர்வு 28.12.2024



இளவாலை வடக்கு இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி ஆனந்தகுமாரசாமி 28.12.2024 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு (மலேயன் Pensioner), சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் (B.A, ஓய்வுநிலை அதிபர், திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை), பூதாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆனந்த குமாரசாமி (B.A, ஓய்வுநிலை அதிபர்) இன் அன்பு மனைவியும், சிவானந்தன் (சிவாஜி - Accountant, London) இன் பாசமிகு தாயாரும், ஜனனியின் (Customer Service Adviser) பாசமிகு மாமியாரும், பவன் (Management Accountant, London) இன் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற சரோஜினிதேவி கிருபாகரன், காலஞ்சென்ற Dr.கணேசலிங்கம் (R.M.O), குமாரலிங்கம் (J.P, Retd. E.S, C.E.B) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி சிவராஜா, இராஜ இராஜேஸ்வரி விசுவநாத முதலியார், பரமேஸ்வரி சச்சிதானந்தம், ஸ்ரீபாஸ்கரன் (B.A, முன்னாள் தவிசாளர் பிரதேச சபை, KKS), கலாநிதி சுசீந்திரராசா (PhD, வாழ்நாள் பேராசிரியர் யாழ். பல்கலைக் கழகம்), Dr. மகேந்திரன் (E.N.T Surgeon), பாலேந்திரா (Provincial/ Director R.D.A) மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் புவனேஸ்வரி சண்முகலிங்கம் (B.A, ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தகவல் :
குடும்பத்தினர்

(698)

## இராசிபலன்

03.01.2025
மார்கழி 19, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.15 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 12.05 மணிவரை
சுபநேரம் 6.30-8.00 மணிவரை
இராகுகாலம் 11.00-12.30 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்** — வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, கௌரவக் குறைவான நாள்.

**துலாம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** — எதிர்கால நலன் கருதி எடுத்தி முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் ஆர்வம் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** — சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** — உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** — சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டால் சிறப்புக்கள் கூடும்.

**கன்னி** — தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** — விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — தொழில் ரீதியான அலைச்சல்கள் ஏற்படலாம், தேக நலனில் கவனம் தேவை, தொழிலில் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

நம் கவனக் குறைவு தான் அதிக தோல்விகளை ஏற்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி மல்லாவியில் கையெழுத்து போராட்டம்



(மல்லாவி)

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு - மல்லாவி நகரில் கையெழுத்து போராட்டம் நேற்று இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மல்லாவி நகரில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

குறித்த கையெழுத்துக்கள், மகஜராக ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. (8)

# வைகுந்த ஏகாதசி பெருவிழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்க நாதப் பெருமாள்கோவிலில் வைகுந்த ஏகாதசிப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

புண்ணிய விரதங்களில் சிறந்தது ஏகாதசி ஆகும்.

எட்டு வயதுக்கு மேற்பட்டவர்களிலிருந்து எண்பது வயது வரை உள்ள யாவரும் வருகை தந்து இவ் விரதத்தை அனுஷ்டிக்குமாறு ஆலய பரிபாலன சபையும் உபயகாரரும் அழைத்துள்ளனர். (நி)

# பெரும்போகத்திற்கான நெல் கொள்வனவு ஆரம்பம்

(கொழும்பு)

பெரும்போகத்துக்கான நெல் கொள்வனவு இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்திடம் உள்ள அரிசி கையிருப்பை அதிகரிக்கவும் லங்கா சதொச நிறுவனங்களின் ஊடாக அரிசி விற்பனையை விரிவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு விவசாயிகளிடம் இருந்து அதிகளவான நெல்லை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இருளில் மூழ்கிக் கிடக்கும் வீதிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிரதான வீதிகள் சில கடந்த சில வாரங்களாக இருளில் மூழ்கியுள்ளமையால் இரவில் பயணம் செய்வோர் கடும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மிக விரைவில் சீர் செய்யுமாறும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் வா.பார்த்தீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி ஆகிய பிரதான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரத்திற்குட்பட்டது.

அவ் பிரதான வீதிகளை ஒளியூட்டும் முகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் குறித்த நெடுஞ்சாலையின் இரு பக்கமும் வலுக்கூடிய மின் விளக்குகள் அமைக்கப்பட்டு அவ் மின்விளக்குகள் உள்ளூராட்சி மன்றங்களின் பராமரிப்பிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கையளிக்கப்பட்டன.

அதன் அடிப்படையில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியினுள் பருத்தித்துறை வீதியில் 64 மின்விளக்குகளும் பலாலி வீதியில் 103 மின்விளக்குகளும் காங்கேசன்துறை வீதியில் 87 மின்விளக்குகளும் என மொத்தமாக 254 மின்விளக்குகள் யாழ்.மாநகர சபையின் பராமரிப்பில் உள்ளன.

கடந்த சில வாரங்களாக குறித்த 254 மின்விளக்குகளில் 10 இற்கும் குறைவான மின்விளக்குகள் மட்டுமே ஒளிருகின்றது.

இவ் மின்விளக்குகளை பாராமரிக்கின்ற அதிகாரமுடைய யாழ்.மாநகர சபை அலுவலகம், நல்லூர் கந்த சுவாமி கோவில் உட்பட்ட மாநகரத்தின் மிக முக்கிய பகுதிகள் மிகவும் முக்கியமான சந்திகள் அனைத்தும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

குறித்த பிரதான வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்களின் வெளிச்சமும் பிரதான வீதிகளில் காணப்படும் வியாபார நிலையங்களின் விளம்பர பலகைகளின் வெளிச்சமுமே குறித்த வீதிகளுக்கு ஒளியூட்டுகின்றது.

இது தொடர்பில் யாழ்.மாநகர சபை வட்டாரங்களிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது மின் ஆளிகள் சீர் செய்யப்படுகின்றது என்றும் இரண்டொரு தினங்களில் குறித்த மின் விளக்குகள் ஒளிரவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மிகவும் போக்குவரத்து நெரிசல் கூடிய மாநகரத்தின் மிக முக்கிய இவ் பிரதான வீதிகள் இருளில் மூழ்கிக்கிடப்பது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல.

எனவே குறித்த மின்விளக்குகளை ஒளிரவிடுவதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை விரைவாக யாழ்.மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-33)

# நேபாள பிரதமரை சந்தித்த ரணில்



(நேபாளம்)

நேபாளத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை அந்நாட்டு பிரதமர் கே.பி.சர்மா ஒலியை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பானது பலுவத்தாரில் அமைந்துள்ள நேபாள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது நேபாள-இலங்கை இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. (நி)

# முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டி வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர் பகுதியில் இரவு வேளை முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டி, வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் இரண்டு முச்சக்கரவண்டிகளும் கைப்பற்றப்பட்டன.

அரியாலை மற்றும் பொம்மைவெளி பகுதியைச் சேர்ந்த மூவர் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்,

யாழ் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளை யாழ்.நகர்ப்பகுதியில் ஒன்று கூடிய இளைஞர்கள் குழுவினர் முச்சக்கரவண்டியில் சாகசம் காட்டியதுடன் இளைஞர் ஒருவரை கடுமை யாகத் தாக்கியிருந்தனர். இது தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி பல்வேறு தரப்பில் இருந்தும் அழுத்தங்கள் ஏற்பட்ட நிலையில் குறித்த காணொளியை அடிப்படையாக கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையின் போது அடையாளம் காணப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில், குறித்த நபர்களை கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-33)

# கடவுச்சீட்டு வழங்குவதில் மீண்டும் சிக்கல்

## ஐந்து மாதங்கள் வரை காத்திருக்கும் நிலை

(கொழும்பு)

கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்கான புதிய விண்ணப்பங்களுக்கு ஐந்து மாத காலத்தின் பின்னரே நேரம் ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதிக்குப் பின்னரான திகதிகளே ஒதுக்கப்படுகின்றது.

இதன் காரணமாக புதிய விண்ணப்பதாரிகள் சுமார் ஐந்து மாதங்கள் வரை காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது,

கடவுச்சீட்டு பற்றாக்குறை காரணமாகவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு, பிரதேசசபை-சுன்னாகம் ஆதனவரி அறவீடு தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் மற்றும் உடுவில் உபஅலுவலகங்களில் தை மாதம் 31 ஆம் திகதிக்குள் 2025 ஆம் ஆண்டிற்கான சோலைவரி செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, மக்கள் தங்களது ஆதனத்திற்கான சோலைவரியினை எமது சுன்னாகம் மற்றும் உடுவில் உப அலுவலகங்களில் வேலைநாட்களில் காலை 8.30 - பிற்பகல் 4.00 மணி வரையும், தைப்பொங்கல் விடுமுறை தவிர்ந்த விடுமுறை நாட்களிலும், சனி மற்றும் ஞாயிறு நாட்களிலும் காலை8.30 -பிற்பகல்2.00மணி வரையும் செலுத்தி 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

திருமதி சாரதா உருத்திரசம்பவன் செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம். 03.01.2025.

## இத்தாற் சகலருக்கும் அறியத்தருவது

1. உரும்பிராய் சந்தை ஆட்டிறைச்சிக் கடை
2. நிலாவரை புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை

ஆட்டிறைச்சியை ருசித்து உண்ணும் சகல ஆட்டிறைச்சி பிரியர்களுக்கும் எனது அன்பான புதுவருட வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், மேற்குறித்த இரு ஆட்டிறைச்சிக் கடைகளின் 2025 ஆம் ஆண்டுக்கான ஆட்டிறைச்சிக் கடை குத்தகை எனக்கு கிடைத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். உரும்பிராய் சந்தையில் இருபது வருடங்களாக ஆட்டிறைச்சிக் கடையை நடாத்திய எனக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன், 2025 ஆம் ஆண்டிலும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இரு ஆட்டிறைச்சிக் கடைகளும் முதன் முதலில் 04.01.2025 (சனி) 05.01.2025 (ஞாயிறு) ஆகிய தினங்களில் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட இரு தினங்களில் ஆட்டிறைச்சி வாங்க வரும் அன்பர்களுக்கு இரண்டு எவசில்வர் கோப்பை அல்லது இரண்டு அரிதட்டு அன்பளிப்பாக வழங்கப்படும்.

**077 685 7165** (2895) **இப்படிக்கு- யுனைட்**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1975 - இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: HNDA, WORK(PVT)
எதிர்பார்ப்பு : உத்தியோகம்.
தொ.இ: B/15054

பிறப்பு: 1982 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கிபா-18
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L,PHI
எதிர்பார்ப்பு - தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்.
தொ.இ: B/15055

பிறப்பு:1992 - இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கிபா-24
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Shop(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15056

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1978- இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 49
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: தகுதியானவர், விவாகரத் தானவர்கள்.
தொ.இ: G/15095

பிறப்பு -1991 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1 இல் செவ்
கி.பா: 29
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-BBM, Work (Germany)
எதிர்பார்ப்பு:- பட்டதாரி PR உள்ளவர்
தொ.இ: G/15100

பிறப்பு - 1998 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா- 101
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: HNDA, Account Executive(pvt)
எதிர்பார்ப்பு - படித்த ஆண்
தொ.இ: G/15068

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

## ஜனவரி 7 இல் கூடவுள்ள பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை 2025 ஜனவரி 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த 31 ஆம் திகதிநடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. (நி)

## கேள்விப் பத்திரம் கோரல்

**யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**

கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்.

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தர கட்டிடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக்கடைத்தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத்தொகுதிகளை பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்திசெய்து கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் **"கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரம்"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 17.01.2025ஆம் திகதிக்கு முன் **தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

(சி-1931)

**தலைவர், யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)**
**யாழ்ப்பாணம்.** **03.01.2025**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் வினாயகமூர்த்தி செல்வராசா பெண் சறோஜினிதேவி
சபை ஆதனவரிப் பதிவேட்டின்படி பெயர்: வின்சென்ற் போல் பெண் றோசமுத்து.
அன்ரன் செல்வராசா பெண் மேரிஸ் ஸ்ரெல்லா
முகவரி ஆதன இல 17 மற்றும் 19இன் பகுதி. பண்ணாகம் வீதி. சில்லாலை. வட்டாரம் - 01

வட்டாரம் 01, பண்ணாகம் வீதி ஆதன இல: 17 இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவில்பற்று சில்லாலை இறை "எய்ப்பன்றித்தாழ்வு" எனும் பெயருள்ள நிலப்பரப்பு ஐந்து (05) விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சில்லாலை சுவாம்பிள்ளை வின்சேந்திப்போலும் பெண் றோசமுத்துவும் ஆகியோரால் பிரசித்த நொத்தாரிசு இ.இராமலிங்கம் முகதாவில் 1977/1969.04.13 ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் அன்ரன் செல்வராசா பெண் மேரிமறிஸ்ரெலாவுக்கு வந்தடைந்தது.

வட்டாரம் 01. பண்ணாகம் வீதி. ஆதன இல: 19 இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவில்பற்று சில்லாலை இறை "எய்ப்பன்றித்தாழ்வு" எனும் பெயருள்ள நிலப்பரப்பு ஆறு அரை (6 1/2) விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் சில்லாலை சுவாம்பிள்ளை வின் சேந்திப்போலும் பெண் றோசமுத்துவும் ஆகியோரால் பிரசித்த நொத்தாரிசு இ.இராமலிங்கம் முகதாவில் 3056/1972.04.03 ஆம் இலக்க சீதன உறுதிப்பிரகாரம் அந்தோனிப்பிள்ளை விக்ரர் பெண் அலோசியா அசம்தாவுக்கு வந்தடைந்தது.

பின்னர் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நாயகனை விட்டுப்பிரிந்திருக்கும் அந்தோனிப்பிள்ளை விக்ரர் பெண் அலோசியா அசம்தா (உறுதி இல 3056) மற்றும் செல்வராசாவும் பெண் மறிஸ்ரெலா (உறுதி இல 1977) ஆகிய இவர்களிடமிருந்து. (3056/1972.04.03 ஆம் இலக்க உறுதிப் பிரகாரம் நிலப்பரப்பு 6 ½ மற்றும் 1977/1969.04.13 ஆம் இலக்க உறுதிப் பிரகாரம் நிலப்பரப்பு 0 (பூச்சியம்) குளி 7 உம் ) பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 6590/2008.08.20 ஆம் இலக்க அறுதி உறுதிப்படி வினாயகமூர்த்தி செல்வராசாக்கும் பெண் சறோஜினிதேவிக்கும் வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் A.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட 0086 ம் இலக்க 2008.07.28ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 07 குளி 17 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு அம்பலவாணர் சச்சிதானந்தனுக்கும் மறுபெயருக்குமுரிய காணிகள்
கிழக்கு -ஒழுங்கையும் சந்தியாப்பிள்ளையும் பிலிப்புப் பிள்ளையின் ஆதனம்
மேற்கு -ஒழுங்கையும் அன்ரன் செல்வராசா பெண் மேரிமறிஸ்ரெலாவின் மிகுதிக் காணியும்
தெற்கு -ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை வினாயகமூர்த்தி செல்வராசாக்கும் பெண் சறோஜினிதேவிக்கும் என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2892)

**செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 160 கிலோ எடையில் இராஜகோபுரத்திற்கு மாலை





(டில்லி)

இந்தியாவில் கரூர் மாநகரத்திலுள்ள பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ அலங்கார வள்ளி செளந்திர நாயகி உடனராகிய பசுபதிஸ்வரர் ஆலயத்தின் ராஜ கோபுரத்திற்கு 160 கிலோ எடையில் 116 அடி உயரத்திற்கு கட்டப்பட்ட மாலை சூடப்பட்டது.

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு பக்தர்களால் இம்மாலை இராஜகோபுரத்தில் ஏற்றப்பட்டது.

செவ்வந்தி, பச்சைத் துளசி, விருச்சி, மாசி பச்சை, கோழிக்கொண்டை, மல்லிகைப்பூ உட்பட 7 வகையான மலர்களைக் கொண்டு இம்மாலை செய்யப்பட்டதுடன். ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வினை இவர்கள் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சுற்றுலாப் பேருந்து விபத்து 5 பேர் உயிரிழப்பு

### தாய்லாந்தில் சோகம்



(பாங்கொக்)

தாய்லாந்தில் சுற்றுலாப் பேரூந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்

தெற்கு தாய்லாந்தில் உள்ள யாலா மாகாணத்திற்கு சுற்றுலா செல்வதற்காக பாங்கொங் அருகே சென்ற போது பேரூந்து சூரத் தானி மாகாணத்தில் உள்ள சாலையின் வளைவில் திரும்பும் போது மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்

மேலும் இந்தச் சம்பவம் பற்றி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்கள் கூட்டத்திற்

## 15 பேர் உயிரிழப்பு, 3

### புத்தாண்டு தினத்தில் அமெரி
### ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு தொடர்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் கார் புகுந்து கோர விபத்தை ஏற்படுத்தியுள்ளது.**



அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் நியூ ஆர்லியன்ஸ் நகரில் மக்கள் கூட்டத்தின் மீது கார் மோதியதில் சுமார் 15 பேர் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இதில் 30 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய SUV காரை ஓட்டி வந்த நபர் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உடனே பொலிஸார் அந்தக் காரை மடக்கி பிடித்தனர். அப்போது காரை ஓட்டிய நபருக்கும் பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் அந்த நபர் சுட்டு கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் இது வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல் என்பதும் தீவிரவாதத்துடன் தொடர்புடையது என்பதும் தெரியவந்

## ட்ரம்பின் ஹோட்டலுக்கு வெ
## வெடித்து சிதறிய டெஸ்லா கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பின் லாஸ் வேகாஸில் அமைந்துள்ள ஹோட்டலுக்கு வெளியே டெஸ்லா சைபர்ட்ரக் வாகனம் ஒன்று வெடித்துச் சிதறியது.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் புதன் கிழமையன்று இடம்பெற்ற இந்த வெடிப்பில் வாகனத்திற்குள் இருந்த அதன் சாரதி உயிரிழந்ததுடன் மேலும் 7 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிப்பு பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் தற்சமயம் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

வெடித்துச்சிதறிய டெஸ்லா சைபர்ட்ரக் எலோன் மஸ்க்கிற்கு சொந்தமானது.

அவர் டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய நண்பராக இருந்து வருகிறார். அவரது வெற்றிகரமான 2024 அமெரிக்க தேர்தல் பிரசாரத்திற்கு மில்லியன் கணக்கான நன்கொடைகளை பில்லியனர் வழங்கினார். அது மாத்திரமல்லாது



அவர் ட்ரம்பின் அரசாங்க செயற்றிறன் துறையை வழிநடத்தும் பணியையும் பெற்றுள்ளார்.

இதனிடையே லாஸ் வேகாஸில் நடந்த சம்பவம் ஒரு சாத்தியமான பயங்கரவாத தாக்குதலாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ற்குள் புகுந்த கார்! 30 பேர் படுகாயம்!

## ...மரிக்காவில் பயங்கரம் ...டர்பா?-விசாரணை தீவிரம்



...தது.

கார் தாக்குதலை நடத்தியவர் டெக்சாஸை சேர்ந்த 42 வயதான ஷாம்ஷத் டின் ஜப்பார் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. முன்னாள் அமெரிக்க கடற்படை வீரரான அவர் ஒருமுறை ஆப்கானிஸ்தானில் பணியாற்றி உள்ளார். அவர் தாக்குதலுக்கு பயன்படுத்திய காரில் வெடிகுண்டு, துப்பாக்கி, ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் கொடி ஆகியவை இருந்தன. அவர் பலரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் இத்தாக்குதலை நடத்தி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# பொது இடங்களில் பர்தா அணிய தடை

## சுவிட்சர்லாந்தில் புதிய நடைமுறை அமுல்



(பேர்ன்)

பொது இடங்களில் முகத்தை மறைக்கும் ஆடைகளை அணிவதற்கான தடை சுவிட்சர்லாந்தில் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

அந்நாட்டில் மக்கள் பொது வெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடை அணிய தடை விதிப்பது குறித்து கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்போது இந்த வாக்கெடுப்பில் பொதுவெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான உடையை அணிந்து செல்ல தடை விதிக்க வேண்டும் என்று 51 வீத மானோர் வாக்களித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்நாட்டு அரசு கடந்த நவம்பர் 6 ஆம் திகதி புதிய சட்டத்தை நிறைவேற்றி உள்ளதுடன் அந்தச் சட்டம் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வந்துள்ளது.

இந்தச் சட்டம் குறைந்த எண்ணிக்கையிலான மக்களை மட்டுமே பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்தில் சுமார் 400.000 முஸ்லீம்கள் வசிக்கின்றனர். ஆனால் ஒரு சிலர் மட்டுமே முகத்தை மறைக்கும் ஆடைகளை அணிவதாக பெடரல் சபை மதிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த தடையானது முஸ்லீம் சுற்றுலாப் பயணிகளைக் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பாரம்பரியமாக இத்தகைய முக்காடுகளை அணிந்து வரும் சுற்றுலாப் பயணிகளை பாதிக்கலாம் என சுற்றுலா நிபுணர்கள் கவலைகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ... வெளியே ...சைபர்ட்ரக்




பார்க்கப்படுவதாக மூன்று மூத்த அமெரிக்க சட்ட அமுலாக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், வெடிப்புக்கான காரணத்தை இதுவரை அதிகாரிகள் கண்டறியவில்லை. (நி)

# ஹோட்டலில் சூடு 10 பேர் உயிரிழப்பு

## தென்கிழக்கு ஐரோப்பாவில் சம்பவம்

தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் தீபகற்பகத்தில் உள்ள நாடு மாண்டினீக்ரோ. இங்குள்ள செட்டின்ஜே நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் துப்பாக்கிச் சூடு நடந்தது.

45 வயதான நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் 10 பேர் உயிரிழந்தனர்.

பின்னர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். அவர் தனது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரையும் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் அவரது 2 குழந்தைகளையும் கொன்றுள்ளார். தப்பி ஓடிய அவரை பொலிஸார் தேடிவருகிறனர். (நி)




# சிரியாவில் ஐ.எஸ் இலக்குகள் மீது பிரான்ஸ் வான் தாக்குதல்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ் அமைப்பின் இலக்குகள் மீது பிரான்ஸ் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சிரியாவில் உள்ள ஐஎஸ் அமைப்பின் இலக்குகள் மீது விமானதாக்குதலை மேற்கொண்டதாகப் பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சர் செபஸ்டியன் லெபெர்கொனு தெரிவித்துள்ளார்.

பசார் அல் அசாத்தின் அரசாங்கத்தின் வீழ்ச்சியின் பின்னர் பிரான்ஸ் ஐ.எஸ் இலக்குகள்மீது மேற்கொண்ட முதல் தாக்குதல் இதுவென்பதுடன் 2014 - 2015 முதல் சிரியா ஈராக்கில் ஐ.எஸ் அமைப்பிற்கு எதிராக செயற்பட்டுவரும் சர்வதேச கூட்டணியில் பிரான்ஸ் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் உயர்ந்த முட்டை விலை

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்த முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 36 ரூபாயாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக முட்டை விலை 28 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க புதிய வேலைத்திட்டம்



(கொழும்பு)

இந்த வருடம் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 3 மில்லியனாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவான மாதமாக இருந்தது.

233,087 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, புத்தாண்டில் இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 3 மில்லியன் வரை அதிகரிக்க புதிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 250 | 230 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 1500 | 1400 | 1000 | 1200 |
| தக்காளி | 400 | 350 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 220 | 200 |
| கோவா | 200 | 250 | 250 | 320 |
| கரட் | 350 | 300 | 250 | 400 |
| பூசணி | 140 | 300 | 200 | 250 |
| புடோல் | 160 | 300 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 320 | 220 | 250 |
| பாகற்காய் | 600 | 700 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 200 | 280 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 200 | 400 |
| லீக்ஸ் | 450 | 380 | 280 | 400 |
| பீற்றூட் | 350 | 450 | 400 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- |
| போஞ்சி | 300 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 500 | 700 | 600 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 750 | 600 | 800 |
| முள்ளங்கி | 240 | 120 | 400 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல்

294



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## வாக்கும் மனமும்

நானா? நீயா? இது இன்றைக்கு எல்லா மட்டத்திலேயும் இருந்து கொண்டு இருக்கிற ஒருகேள்வி.

ஒரு சமயம் மனதிற்கும் வாக்குக்கும் இடையிலே கூட இந்தப் பிரச்சினை வந்துவிட்டது. அதாவது இரண்டு பேருக்குள்ளே யார் பெரியவர்கள் என்ற சண்டை.

மனம் என்பது நினைக்கிறது. வாக்கு என்பது பேசுகிறது. வாக்கு தேவதை தான் முதலிலே சண்டைக்கு வந்தது. அதாவது எந்த தேவதையின் உதவியாலே வாக்கு பேசுகின்றதோ அது தான் வாக்குத் தேவதை.

வாக்கு தேவதை மனதைப் பார்த்து சொல்லியது. ஏ... மனமே! நீ எவ்வளவோ விடயங்களை நினைக்கிறாய் உண்மை தான். நீ நினைப்பதை வெளியிலே சொல்வது நான் தானே .

நான் பேசாமல் இருந்துவிட்டால் நீ நினைப்பது என்ன என்பது வெளியில் யாருக்குத் தெரியப் போகிறது. அதாவது உன்னைப் பற்றி வெளியிலே தெரிவதற்கு நான் தான் காரணம். அதனால் நான் தான் பெரியவன். இது வாக்கு தேவதையுடைய வாதம்.

இதற்கு மனது பதில் சொல்லியது. இதோ பார்! நீ பேசுவதற்கு விடயம் கொடுக்கிறதே நான் தான். நான் நினைக்கவில்லை என்றால் நீ எப்படிப் பேச முடியும். முதலிலே நான் சிந்திக்கின்றேன் பின்பு அதை நீ வார்த்தையாலே வெளிப்படுத்துகிறாய்.

அதனால் நான் தான் பெரியவன் என்றது மனது. இப்போது மனது பெரிதா? வாக்கு பெரிதா? இது தான் அவர்களுக்குள்ளே போட்டி.

எண்ணினால் தானே பேச்சு என்கின்றது இது. பேசினால் தானே எண்ணமே வெளியிலே தெரியும் என்றது அது. இப்போது என்ன செய்வது சரி நமக்குள்ளே சண்டை வேண்டாம். நேராக பிரம்மாவிடம் போவோம். அவர் தானே எல்லாத்தையும் படைத்தவர், உண்டாக்கியவர். அவர் என்ன சொல்கின்றார் என்று கேட்போம் என்று முடிவு செய்து கொண்டு இரண்டு பேரும் பிரம்மாவிடம் போனார்கள்.

பிரம்மா கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு படைப்பு ரீதியாக நான் முதலிலே மனதைத் தானே படைத்தேன். அதனால் மனது தான் பெரியது என்று சொல்லிவிட்டார்.

இதைக்கேட்டதும் வாக்குத் தேவதைக்கு மிகவும் வருத்தம். ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்துவிட்டது. அப்போது மனது அங்கு வந்து ஆறுதல் சொல்லியது.

இதோ பார். அழாதே நமக்குள்ளே யார் பெரியவன் என்கிறதை நாமே ஒரு பரீட்சை வைத்துத் தீர்மானித்துக் கொள்வோம் இதற்கு நீ தயாரா? என்றது. தயார் என்றது அது.

அதாவது இப்போது நாம் இரண்டு பேரும் என்ன செய்கின்றோம் என்றால் வேகமாக ஓடிப்போய் பிரம்மத்தைப் பார்த்துவிட்டு இதே இடத்திக்குத் திரும்பி வந்துவிடவேண்டும். யார் முதலிலே திரும்பி வருகிறார்களோ அவர்கள் தான் பெரியவர்கள் சரியா என்றது மனது.

சரி என்று ஒத்துக் கொண்டது வாக்கு. உடனே போட்டி ஆரம்பமாகியது. இரண்டு பேரும் பிரம்மத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். மனது மனோ வேகத்திலே போனது. மனோ வேகம் என்றால் அது எவ்வளவு வேகம் தெரியுமா?

இப்போது நீங்கள் மனதாலேயே அமெரிக்காவுக்குப் போக வேண்டும் என்றால் எவ்வளவு நேரம் ஆகும். நினைத்தாலே போனது மாதிரித் தானே அவ்வளவு வேகம்.

இந்த வேகத்திலே மனது பிரம்மத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. வாக்கு அவ்வளவு வேகத்திலே போக முடியவில்லை. வாக்கு தேவதை தானே அதனாலே வாக் போய்கொண்டிருக்கிறது. ஓட முடியவில்லை. கொஞ்சத் தூரம் போய் பார்த்தது. அதற்கு மேலே போக முடியவில்லை நின்றுவிட்டது.

முன்னாலே ஓடிய மனது அதிகக் காலம் கழித்து திரும்பி வந்தது. வழியிலே நின்று கொண்டிருந்த வாக்கு தேவதை அதைப்பார்த்தது. என்ன பிரம்மத்தைப் பார்த்துவிட்டயா? என்று கேட்டது. எங்கே பார்க்கிறது. பிரம்மம் என்பது எனக்கும் எட்டாத ஒரு விடயம் என்பதை தெரிந்து கொண்டு திரும்பி வந்துவிட்டேன் என்றது மனது.

அது எனக்கும் எட்டாத ஒரு விடயமாகத்தான் இருக்கிறது. அதனாலே நமக்குள்ளே போட்டி வேண்டாம். இரண்டு பேரும் நண்பர்களா இருப்போம் என்றது வாக்கு. மனதும் வாக்கும் நெருக்கமாகி விட்டார்கள்.

மனம்- வாக்கு- செயல் இவை மூன்று ஒன்றாக இருக்க வேண்டும். என்ன நினைக்கின்றோமோ அதைச் சொல்ல வேண்டும். என்ன சொல்கின்றோமோ அதைச் செய்ய வேண்டும். இப்போது எல்லாம் அப்படி இருக்கின்றோமா? நினைத்துப் பாருங்கள்.

ஒரு கூட்டத்திலே ஒரு சொற்பொழிவாளர் பேசி முடித்தார். கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் மனதுக்குள்ளே என்ன நினைத்தாரோ தெரியவில்லை. மிகவும் உற்சாகத்தோடு கை தட்டினார். அதிக நேரம் -விடாமல் தட்டினார். கை தட்டி முடித்ததும் பக்கத்திலே இருந்த நான் அவரிடம் கேட்டேன். அவருடைய பேச்சுக்காகவா இந்த கைத்தட்டல் என்றேன். இல்லை பேச்சை நிறுத்தினதற்காக என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கையில் அதிகரிக்கும் மடிச்சுக்கட்டி நோய்!

## மீளவும் அழிவைச் சந்திக்கும் விவசாயிகள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பெரும்போக நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றமையால் நெல் உற்பத்தி பாதிக்கப்படும் நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் மாணாவரி நிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 69 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இம்முறை பெரும் போக நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கமும் தத்தியின் தாக்கமும் அதிகளவில் காணப்படுகின்றன.

இதனால் விவசாய உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

குறிப்பாக பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன் போன்ற பகுதிகளில் இவ்வாறான நோயின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாக மருந்துகளை விசிறுகின்ற போதும் அவை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றும் இவ்வாறு தொடர்ச்சியான நோய் தாக்கத்தினால் நெல் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே மழை, வெள்ளம் என்பவற்றால் அழிவுகளைச் சந்தித்துள்ளமையினால் இந்த நோய்த்தாக்கத்தினால் மீளவும்



அழிவை சந்திக்கும் நிலை காணப்படுவதாகவும் பாதிக்கப் பட்ட விவசாயிகள் தெரிவித்துள் ளனர். (நி-8-315)

## காயத்துடன் காட்டு யானை



(தருமபுரம்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வலது கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் காலில் காயத்துடன் காட்டு யானை ஒன்று குறித்த பகுதியில் காணப்படுவதாகவும் தொடர்ந்து சஞ்சரித்து நிற்பதால் தொழிலுக்குச் செல்லும் தாம் அச்சத்து டனே செல்ல வேண்டிய நிலையுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக் களத்தினருக்கு அறிவிக் கப்பட்ட நிலையில் தாம் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர். (8-316)

# கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில் 78 ஆயிரத்து 375 வெடிபொருட்கள் மீட்பு

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் ஸார்ப் நிறுவனத்தினால் கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் வரையான காலப் பகுதியில் 36 இலட்சத்து 57 ஆயிரத்து 829 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் இருந்து 78 ஆயிரத்து 375 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ள்தாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து மக்களின் மீள் குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், உட்கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றை துரிதப்படுத்தும் வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்களால் சர்வதேச நாடுகளின் நிதியுதவியுடன் உள்ளூர் பணியாளர்களைக் கொண்டு வெடிபொருட்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளில் ஸார்ப் நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது

ஸார்ப் நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தச்சடம்பன்,அம்பகாமம்,ஒலுமடு மற்றும் மாங்குளம்,கொக்காவில் பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் தட்டுவன் கொட்டி ஆகிய பகுதிகளிலும் 36 இலட்சத்து 57 ஆயிரத்து 829 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 78 ஆயிரத்து 375 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார். (க-8-315)

# சீமெந்துகளுடன் வந்த லொறி குடைசாய்ந்து விபத்து



(வவுனியா)

வவுனியா ஓமந்தை பணிக்கர் நீராவியடிப் பகுதியில் நேற்றைய தினம் சீமெந்துகளை ஏற்றிச் சென்ற லொறி குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்துகளை ஏற்றிச்சென்ற லொறியே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் லொறியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)

# இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயம்

## முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு அளம்பல் வீதியில் உள்ள உப்புக்குளம் பகுதியில் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

இதேவேளை புதுக்குடியிருப்புப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் மாடு ஒன்றுடன் மோதி விபத்துள்ளானதில் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# வவுனியாவில் கத்திக்குத்து ஒருவர் வைத்தியசாலையில்

(வவுனியா)

வவுனியா இலுப்பையடிச் சந்தியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 672





ஆதித்த கரிகாலர் அருள்மொழிவர்மனைப் போன்ற எடுப்பார் கைப்பிள்ளை அல்ல. மதுராந்தகனைப் போன்ற பயங்கொள்ளிப் பேதை அல்ல. கடம்பூருக்கு வரவேண்டாமென்று தமக்கையும் முதன் மந்திரியும் செய்தி அனுப்பியிருப்பதனாலேயே கட்டாயம் ஆதித்த கரிகாலர் கடம்பூருக்கு வந்து சேருவார்!" என்றாள் நந்தினி.

"தேவி! அதையும் தாங்கள் பூரணமாக நம்பியிருக்க வேண்டாம். அவர்கள் அனுப்பிய செய்தி காஞ்சிக்குப் போய்ச் சேராது!" என்றான் ரவிதாஸன்.

"என்ன சொல்கிறீர், ஐயா! சற்று விளக்கமாகச் சொல்லும்!" என்றாள் நந்தினி. அவளுடைய குரலில் இப்போது பரபரப்புத் தொனித்தது.

"தேவி! ஆதித்த கரிகாலனுக்குச் செய்தி யார் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும் தங்களுக்குத் தெரியுமா?" என்று ரவிதாஸன் கேட்டான். "நிச்சயமாகத் தெரியாது. ஆனால் ஊகிக்க முடியும்."

"நல்லது! ஊகிக்க வேண்டிய அவசியமில்லை. அவனை நாங்கள் பிடித்துக் கொண்டே வந்திருக்கிறோம். சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்தில் அவனும் இருந்தான். நம்முடைய இரகசியங்கள் எல்லாம் அவனுக்குத் தெரியும். அவனை மேலே உயிருடன் போக விடுவது நமக்கு நாமே சர்வநாசத்தைத் தேடிக் கொள்வதாகும். இடும்பன்காரி! எங்கே அந்த ஒற்றனை இங்கே அழைத்துக் கொண்டு வா!" என்றான் ரவிதாஸன்.

இடும்பன்காரி பள்ளிப்படைக் கோவிலை நோக்கிப் போனான். அவனுடன் இன்னும் இரண்டு பேரும் போனார்கள். நந்தினி அந்தத் திசையை உற்று நோக்கத் தொடங்கினாள். இத்தனை நேரமும் கடுகடுவென்று இருந்த அவளுடைய முகத்தில் இப்போது மறுபடியும் மோகனப் புன்னகை தவழ்ந்தது.

இடும்பன்காரியும், இன்னும் இரண்டு பேரும் வந்தியத்தேவனை நெருங்கினார்கள். அலுத்துச் சலித்துப் போய் அரைத் தூக்கமாக உட்கார்ந்திருந்த அந்த வீரன் மீது திடீரென்று பாய்ந்தார்கள். வந்தியத்தேவன் அவர்களோடு மல்யுத்தம் செய்யலாமா என்று ஒரு கணம் உத்தேசித்தான். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். என்னதான் செய்கிறார்களோ பார்க்கலாம் என்று சும்மா இருந்தான். ஒரு பெரிய கயிற்றினால் அவனுடைய கைகளைச் சேர்த்து உடம்போடு கட்டினார்கள். பிறகு அவனுடைய இரு தோள்களையும் இரண்டு பேர் பிடித்து நடத்தி அழைத்துக் கொண்டு வந்து நந்தினியின் முன்னால் நிறுத்தினார்கள்.

வந்தியத்தேவன் நந்தினியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இப்போது தெரியவில்லை. அமைதி குடிகொண்டிருந்தது. "ஐயா! மறுபடியும்" என்று ஆரம்பித்தாள்.

"ஆம், தேவி, மறுபடியும் வந்துவிட்டேன்! ஆனால் நானாக வரவில்லை!" என்று சொல்லிச் சுற்றிலுமுள்ளவர்களை நோக்கினான்.

நந்தினியின் அருகில் இருந்த சிறுவன், "அம்மா! இவன்தான் என்னை இருட்டில் பிசாசு விழுங்காமல் காப்பாற்றியவன். இவனை ஏன் கட்டிப் போட்டிருக்கிறது?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறுவனைப் பார்த்து "குழந்தை! சும்மா இரு! பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கே பேசக்கூடாது. பேசினால் உன்னைப் புலி விழுங்கிவிடும்!" என்றான்.

"புலியை நான் விழுங்கிவிடுவேன்!" என்றான் சிறுவன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குருவியும் பருந்தும்



காட்டிலே ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் தொடையிலே ஒரு சிட்டுக் குருவி வந்து உட்கார்ந்தது. முனிவர் அதை நோக்கினார்.

சிட்டுக் குருவியின் சின்னஞ் சிறிய அழகான உருவம் அவர் உள்ளத்திலே அன்பு பெருகச் செய்தது.

ஆதரவாக அவர் அதன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அன்பின் மிகுதியால் அதற்குத் தாம் கற்ற கல்வி முழுவதையும் கற்றுக் கொடுத்தார்.

சிட்டுக் குருவி சிறந்த கல்வியறிவு பெற்றது. அது பறவைகளிடம் திரும்பிச் சென்ற போது, எந்தப் பறவையும் கல்வியில் அதற்கு நிகராக நிற்க முடியவில்லை. எல்லாப் பறவைகளும் அதனிடம் யோசனை கேட்க வந்தன. அதன் புகழ் எங்கும் பரவியது.

புகழ் பெருகப் பெருகச் சிட்டுக் குருவிக்குச் செருக்கும் பெருகியது. கல்விக் கடலே நான்தான் என்று நினைத்தது. கல்விக்கடல் என்று எல்லாப் பறவைகளும் தன்னை அழைக்க வேண்டும் என்று அது விரும்பியது. விரும்பியதைத் சொல்லியது. கல்விக் கடல் சிட்டுக் குருவியார் அவர்களே வணக்கம் என்று சொல்லித்தான் எந்தப் பறவையும் தன்னை அழைத்துப் பேச வேண்டும் என்று அது கூறியது.

அவ்வாறு வணங்கிப் பேசாத பறவைகளுடன் அது பேச மறுத்தது. நாளுக்கு நாள் சிட்டுக் குருவியின் செருக்கு அதிகப்படுவதைக் கண்ட மற்றப் பறவைகள் அதன் மேல் வெறுப்புக் கொண்டன.

சிட்டுக்குருவியிடம் அவமானம் அடைந்த சில பறவைகள் பருந்திடம் சென்று முறையிட்டன.

சிட்டுக்குருவியின் அளவு கடந்த செருக்கைப் பற்றி பருந்து கேள்விப்பட்டது.

கோபங்கொண்டு பருந்து பறந்து வந்தது. "ஏ! சிட்டுக் குருவி!" என்று அழைத்தது. சிட்டுக்குருவி திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. "கல்விக் கடலே" என்று அழைத்து வணக்கம் கூறினால்தான் அது பேசும் என்று கூட இருந்த பறவைகள் கூறின. ஆனால் பருந்து அவ்வாறு அழைக்கவில்லை.

"அற்பக் குருவியே உனக்கு இவ்வளவு ஆணவமா !" என்று கேட்டுக்கொண்டே சிட்டுக் குருவியை நெருங்கியது. பிடித்து வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டது.

கருத்துரை :- செருக்குக் கொண்டவர்கள் வெறுப்புக்காளாவார்கள். செருக்கே அவர்களைக் கொல்லும் பகையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பிறரின் முயற்சிகளுக்கு இடையூறு அவிக்காமல் இருப்பதில் கவனமாய் இருப்பவரே இனிய தன்மை உடையவர். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறப்பணிகளை ஆற்றுவதற்கு ஆலயங்கள் முன்வர வேண்டும்

நாட்டின் பொருளாதாரம் மந்தமடைந்த போதிலும் நம் தமிழ் மக்கள் அதற்கு ஈடு கொடுத்து நின்று பிடித்தனர் என்ற விடயம் சாதாரணமானதன்று.

இவ்வாறு பொருளாதாரப் பெருமந்தம் சாதாரண மக்களின் அன்றாடச் சீவனோ பாயத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத் தியபோதிலும் எங்கள் புலம்பெயர் உறவுகளும் நம் தாயகத்திலுள்ள பரோபகாரிகளும் ஏதோ வொரு வகையில் ஏழை மக்களுக்கு உதவி புரிந்தனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதிலும் இன்று நம் தமிழர் தாயகத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் வளத்தோடும் கவின்நிலையோடும் காட்சி தருவதற்கு நம்ம வர்களிடம் உள்ள அறப் பணியும் கல்விப் பணியுமே மூலகாரணம் எனலாம்.

ஆம், ஒரு காலத்தில் நம் முன்னவர்கள் கல்விச்சாலைகள் அமைப்பதற்காக தங்களின் சொந்த நிலங்களைத் தானமாக வழங்கினர்.

இதற்கும் மேலாக, தாங்களே பாடசாலை களை நிறுவி மாணவர்களுக்குக் கல்வி புகட்டினர்.

இன்று நம் தமிழர் தாயகத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்ற அத்தனை கல்விச்சாலை களதும் வரலாற்றை எடுத்து நோக்கினால், நம் முன்னவர்களின் கல்விப் பணி – சமூகப் பணி – அறப்பணி எத்துணை உயர்வான தென்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆக, இன்று வரை நம் தமிழ் இனம் போர் அவலங்களை, திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளை, பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தபோதிலும் அவை அனைத்தையும் எதிர்கொண்டு தாக்குப் பிடித்ததெனில்; அதற்கு எங்கள் தமிழ் மக்களிடம் உயர்ந்து நிற்கின்ற அறப்பணியும் தர்ம சிந்தையும் இரக்க குணமும் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற உன்னதமான சிந்தனையுமே மூலகாரணம் என்பது கவனத்திற்குரியது.

எனவே எம் இனத்திற்கே சொந்தமான அறப்பணிகளை நாம் தொடர்ந்தும் ஆற்று வது மிகவும் அவசியம். அதிலும் நம் மக்கள் ஆலயங்கள் மூலமாக மிக உன்னதமான அறப்பணிகளைச் செய்தனர் என்ற உண்மை உணர்தற்குரியது.

ஆம், நம் மண்ணில் வாழ்ந்த நிலச் சுவாந் தர்கள் ஆலயங்களுக்கு தானமாக வழங்கிய நிலங்களை, ஆலயங்கள் நிலமற்ற ஏழை மக்களுக்கு வழங்கி அவர்கள் அதில் வீடு கட்டி வாழ்வதற்கு வழிசமைத்தன. ஆக, இதிலிருந்து ஆலயங்கள் ஊடாக அறப்பணி களை நம் முன்னோர்கள் ஆற்றினர் என்பது தெளிவாகிறது.

இவ்வாறாக, மிக உயர்ந்த அறப்பணி களை இன்னமும் நம் மண்ணில் இருக்கக் கூடிய ஆலயங்கள் செய்து வருவது போற்று தற்குரியது.

அதேநேரம் யாழ்ப்பாணப் போதனா வைத் தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிலை யத்திற்குத் தேவையான கட்டிடம் இல்லை என்ற செய்தி வேதனை தருவதாகும்.

எனவே யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலைக்கான மகப்பேற்று நிலையத்தை அமைத் துக் கொடுக்க, நயினாதீவு நாகபூசணி அம் பாளின் ஆலயம் முன்வருமாயின் அஃது மிக வும் பொருத்துடையது.

அன்னை நயினை நாகபூசணியாளிடம் குழந்தை வரம் கேட்டு வருகின்ற எத்த னையோ அடியார்கள் மகப்பேற்று நிலையம் அமைக்கும் கைங்கரியத்துக்கு நிச்சயம் உதவுவார்கள் என்பதால், குறித்த பணியை நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயம் முன்னெடுப்பதே சாலப் பொருத்தம்.

திருமலையில் ஆளில்லா ட்ரோன் மீட்பு

## அச்சங்கொள்ளத் தேவையில்லை என்கிறது பாதுகாப்புத் தரப்பு

(திருகோணமலை)

திருகோணமலை கடற் பரப்பில் அண்மையில் மீட் கப்பட்ட ஜெட் மூலம் இயங் கும் இலக்கு ட்ரோன், நாட் டின் தேசியப் பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர் பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு சமர்ப் பித்த இறுதி அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை விமானப் படைத் தளபதியிடம் இறுதி அறிக்கை ஒப்படைக்கப்பட் டுள்ளது.

கடந்த டிசம்பர் 27ஆம் திகதி மீனவர்கள் குழு வால் கண்டுபிடிக்கப்பட்ட ட்ரோன், ஒரு இந்திய நிறு வனத்திற்குச் சொந்தமானது என்பதுடன், பயிற்சி நோக் கங்களுக்காகப் பயன்படுத் தப்பட்டது என்பது விசார ணையில் தெரியவந்தது.

ட்ரோன் கண்டுபிடிக் கப்படுவதற்கு முன்பு சுமார் இரண்டு வாரங்கள் கட லில் மிதந்துகொண்டிருந் தது என்பதும் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தச் சம்ப வம் இலங்கையின் பாது காப்பில் எந்தத் தாக்கத்தை யும் ஏற்படுத்தாது என்றும், நாட்டிற்கு எந்த ஆபத்தை யும் ஏற்படுத்தாது என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7)

## மரக்கிளை வீழ்ந்ததில் கைதியொருவர் உயிரிழப்பு

மாத்தறை சிறைச்சாலையில் சம்பவம்

(மாத்தறை)

மரக்கிளை முறிந்து வீழ்ந் ததில் மாத்தறை சிறைச் சாலையில் கைதியொருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 11 கைதிகள் காய மடைந்துள்ளதாகவும் அவர் களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ள தாகவும் மாத்தறை பொது வைத்தியசாலையின் பேச் சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மாத்தறை மிதிகம பிர தேசத்தைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே சம்ப வத்தில் உயிரிழந்துள்ளார்.

கைதிகள் தடுத்து வைக் கப்பட்டிருந்த கட்டடமொன் றின் மீது நேற்று முன் தினம் மரக்கிளை முறிந்து விழுந்தமையினாலேயே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

சம்பவத்தின்போது கட்ட டத்தினுள் 400 இற்கும் அதிக கைதிகள் இருந்ததாக வும் சிறைச்சாலையின் பாதுகாப்பிற்காக விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் கட மையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளதாகவும் சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரி வித்தார். (ம-7)

நாகப்பட்டினம் – காங்கேசன்துறை

## பயணிகள் கப்பல் சேவை மீண்டும் பிற்போடப்பட்டது

காங்கேசன் துறைமுகத் திலிருந்து தமிழகத்தின் நாகப்பட்டினம் துறைமுகத் துக்கான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் பிற்போ டப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் காங்கே சன் துறையிடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஆண்டு சீரற்ற கால நிலை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த நிலை யில் நேற்று குறித்த சேவை யானது மீள ஆரம்பிக்கப் படும் என அறிவிக்கப்பட் டிருந்தது.

எனவே கப்பல் பயணத் துக்கான முற்பதிவுகள் கடந்தாண்டு நத்தார் தினம் முதல் ஆரம்பமாகி யிருந்தன.

இந்நிலையில் மீண்டும் காலநிலை ஒத்துழைக் காமையினால் கப்பல் சேவைகள் பிற்போடுவ தாகக் கப்பல் நிறுவனம் அறிவித்தது.

இது குறித்துக் கருத்து ரைத்த அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் எதிர்வ ரும் திங்கட்கிழமை கப்பல் சேவையை மீள ஆரம் பிக்க எதிர்பார்த்துள்ள தாகத் தெரிவித்தார். (ம-7)

## திருவெம்பாவை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டக்கோட்டை தெக்க ணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ கண்ணகி யம்மன் ஆலயங்களில் நாளை 04.01.2025 சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு திருவெம் பாவை உற்சவம் ஆரம்ப மாகி இடம்பெற உள்ளது.

10.01.2025 வெள்ளிக் கிழமை அதிகாலை சுவர க்கவாயில் ஏகாதசி உற்சவ மும் 12.01.2025 ஞாயிற் றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடேசர் ஆருத் திரா தரிசனமும் இடம்பெற வுள்ளதாக ஆலய பரிபா லன சபையினர் அறிவித் துள்ளனர். (ம-7)

## பாரவூர்தி குடை சாய்ந்து விபத்து; இருவர் காயம்

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் சீமெந்தினை ஏற்றிச் சென்ற பாரவூர்தி குடை சாய்ந்து விபத்துக் குள்ளானதில் இருவர் காய மடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி சீமெந்து களை ஏற்றிச் சென்ற பார வூர்தியே இவ்வாறு குடை சாய்ந்து விபத்துக்குள்ளா னது.

இவ்விபத்தில் பாரவூர் தியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

பண்டிகைக் காலத்தில்

## பெரிதும் சோபிக்காத பட்டாசு விற்பனை

(கொழும்பு)

கடந்த நத்தார் மற்றும் புத்தாண்டு காலத்தில் பட் டாசு விற்பனையானது 50 வீதத்தால் குறைவடைந் துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னைய ஆண்டுக ளில் நத்தார் மற்றும் புத் தாண்டு நாட்களில் பட்டாசு உற்பத்தி அதிகளவில் இடம்பெற்றது. ஆனால் இந்த ஆண்டு பண்டிகை காலத்தில் பட்டாசு விற்பனை சரிந்ததால், உற்பத்திச் செலவை ஈடு கட்ட பட்டாசுக்களை மிகக் குறைந்த விலையில் விற் பனை செய்ய உற்பத்தி யாளர்கள் நடவடிக்கை எடுத் துள்ளனர்.

கடந்த தேர்தல் காலத் திலிருந்து பட்டாசு உற் பத்தியாளர்கள் தமது பொருட் களை விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருவ தாக தினேஷ் பெர் னாண்டோ சுட்டிக்காட்டி னார். (ம-7)

## மின்வேலியில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல் – நாரம்மல, ரணாவத்தப் பிரதேசத்தில் உள்ள வயலில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மின்சார வேலி யில் சிக்கி இளைஞன் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நாரம் மல, ரணாவத்த பிரதேசத் தைச் சேர்ந்த 22 வயது டையவராவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் வீட்டி லிருந்து வெளியே சென் றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள் ளார்.

இதனால் இளைஞனின் உறவினர்கள் இது தொடர் பில் நாரம்மல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகள் காணாமல் போன இளை ஞனைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த போது வயலி லிருந்து இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

சட்டவிரோதமாக பொருத் தப்பட்டிருந்த மின்சார வேலி யில் சிக்கியே இளைஞன் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி – I

03

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

களுத்துறை பிரதேச சபையின் சில கிராம சேவையாளர் பிரிவுகள் களுத்துறை மாநகர சபையுடன் சேர்க்கப்பட்டன. அதேபோல் திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் சில கிராம சேவையாளர் பிரிவுகள் திருகோணமலை மாநகர சபையுடன் சேர்க்கப்பட்டன. திருகோணமலை நகர சபையின் சில கிராம சேவையாளர் பிரிவுகள் தரம் இறக்கப்பட்டு திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையுடன் சேர்க்கப்பட்டது வியப்புக்குரிய ஒன்றாகும். எனவே தற்போது இலங்கையில் 29 மாநகர சபைகளும் 36 நகர சபைகளும் 276 பிரதேச சபைகளும் காணப்படுகின்றன. இவற்றுக்கான தேர்தல்களே நடைபெறவுள்ளன.

அதிகாரத்தின் கீழ் மட்ட அலகாக பார்க்கப்படுவது கிராம அபிவிருத்தி கிராமோதைய சபைகளாகும். இதில் இச்சபைகளின் அங்கத்தவர்கள் தெரிவானது குறித்த கிராமசேவகர் பிரிவில் கிராம சேவகரால் நடத்தப்படும் கூட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

### உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் வழங்கல்

அரச கொள்கைக்கிணங்க நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மக்களுக்கு பிரதேச மட்டத்தில் பயனுள்ளவாறு கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே உள்ளூராட்சி சபைகளைத் தாபிப்பதற்கான நோக்கமாகும். 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகமும் மேற்பார்வையும் மத்திய அரசிடமிருந்து மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஆயினும் உள்ளூராட்சியுடன் தொடர்புடைய கட்டமைப்புகளையும் தேசிய கொள்கைகளையும் தயாரிக்கும் அதிகாரம் மத்திய அரசின் (உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின்) கீழ் தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (படம்- A)

### உள்ளூராட்சி சபையொன்றின் கடமைகளும் பணிப்பொறுப்புகளும்

பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளால் ஆக்கப்பட்டுள்ள உள்ளூ

## உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் வழங்கல்

படம் -A




ராட்சி சபைகளின் கடமைகளும் பணிப்பொறுப்புகளும் பின்வருமாறு கூறப்படுகிறது. (படம்- B)

"சட்டத்தினால் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் ஒரு நிர்வாக எல்லைக்குள்ளான பிரதேசமொன்றில் வாழ்கின்ற மற்றும் அப்பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்துள்ள பொதுமக்கள் தொடர்பாக அவ்வதிகாரப் பிரதேசத்தின் பொதுப்




படம்-B

பாதைகள், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பாவனைக்குரிய சேவை நிர்வாகம் மற்றும் நிர்வாகம் என்பவற்றினூடாக அச்செயற்பாடுகளைப் பாதுகாத்து மற்றும் விருத்தி செய்து பொது மக்களது நல்வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்களை உருவாக்கி பேணிப் பாதுகாப்பதற்காக உள்ளூராட்சி நிறுவனத்திடமுள்ள வளங்களை வினைத்திறனான விதத்தில் பயன்படுத்துவதும் வழிநடாத்துவதும் இவ்வதிகாரப் பிரதேசத்தினது உள்ளூராட்சி சபைகளின் கடமையும் பணிப் பொறுப்புமாகும்." (படம்-B)

### உள்ளூராட்சி சபைகளினால் வருமானம் தேடும் வழிமுறைகள்

உள்ளூராட்சி சபைகள் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) பொது மக்களுக்கு செய்யும் கடமைகளுக்கும் வழங்கும் சேவைகளுக்கும் ஏற்க வேண்டிய செலவினங்களுக்கு வருமானம் ஈட்டப்பட வேண்டும். அதற்கான வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மூலம் அவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக இடைக்கால விதிகளையும் உருவாக்கிக் கொள்வதற்கு குறிப்பிட்ட கட்டணத்தை பெறுவதற்கு சட்டபூர்வமான ஏற்பாடுகள் உண்டு. முக்கிய சட்டங்கள் அதாவது உள்ளூர் அதிகார சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மூலம் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வேறு சட்டங்களின் கீழும் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கு வருமானத்தை ஈட்டுவதற்கு உரித்தான சட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு: வருடாந்த வரவு செலவு அறிக்கையை தயாரிப்பதன் மூலம் எதிர்பார்க்கும் வருமானத்தையும் செலவினங்களையும் பற்றி உரிய நிர்வாகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதன் ஊடாக உள்ளூர் அதிகார சபைகளின் நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்த முடியும். அதனூடாக சிறந்த மக்கள் சேவையை வழங்குவதன் மூலம் மக்களுக்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் இடையில் சிறந்த உறவைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

எனினும் இலங்கையின் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களால் அச்சபைகளுக்குச் சேர வேண்டிய வருமானம் உரிய விதத்தில் அறவிடப்படாமல் இருப்பதாகவும் இதன் காரணமாக அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் ஒட்டுமொத்த வருமான நிலுவைத் தொகையின் அளவு பாரியளவில் அதிகரித்துள்ளது என்பது இது தொடர்பில் ஆசிய மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நடத்தப்பட்ட வருமானத்தை மதிப்பிடும் உடன்பாட்டுக் கணக்காய்வில் வெளிவந்துள்ளது.

அவதானிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப, அடிப்படைச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றமொன்றுக்காக அறவிடக்கூடிய வருமான மூலங்கள் மற்றும் அவ்வருமானங்களை அறவிடும் சட்டரீதியான செயற்பாடு தொடர்பில் தெளிவான விளக்கமின்மை மற்றும் வருமானத் திரட்டல் தொடர்பான உரிய அதிகாரிகளிடமுள்ள கடமை மற்றும் பணிப்பொறுப்புகள் பற்றிய சரியான கவனமின்மை மற்றும் கணிசமானளவில் வளர்ந்துள்ள நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதில் முறையான திட்டமொன்று இல்லை என்பதுமே இதற்குக் காரணமாகவுள்ளது என்பது மேலும் தெரிய வந்துள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாட்சியை...

வாள்வெட்டு வழக்கு ஒன்றின் சாட்சிக்காக கடந்த 2024.05.30 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு வந்த நபரை, நீதிமன்றத்துக்கு முன்னால் வைத்து வாளால் வெட்டி தாக்க முற்பட்ட மூவரில் இருவர் அன்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தலைமறைவாகியிருந்த பிரதான சந்தேகநபர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - ஆரியகுளத்துக்கு அருகாமையில் வைத்துக் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவருக்கு வாள்வெட்டுத் தொடர்பாக மூன்று திறந்த பிடியாணை உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## படுகாயமடைந்த...

கிளிநொச்சி நகரில் கடந்த 25ஆம் திகதி நத்தார் தினத்தில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு வயதுக் குழந்தை சம்பவ தினமே உயிரிழந்திருந்தது

தந்தை, தாய், மகள் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் நேற்று தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சாவகச்சேரி கல்வயல் பகுதியைச் சேர்ந்த கஜன் யாழினி (வயது-34) என்ற இளம் தாயே உயிரிழந்தவராவார். தந்தையும் மூத்த மகளும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7,316)

## சடலத்தைத்...

ரான ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது-40) இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் - கல்லூண்டாயிலுள்ள சேமக்காலையில் அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக அவரது சடலத்தை தோண்டுமாறு மல்லாகம் நீதிமன்றம் விசேட உத்தரவு பிறப்பித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் - இலுப்பைக்கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குறித்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அதன்பின்னர் நவாலி பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்த விபத்து சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்ததாக வைத்தியர் ஒருவர் தெரிவித்த நிலையில் கிராம சேவகரும் அதற்கு இணங்க பூர்வாங்க செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இந்நிலையில் கல்லூண்டாய் சென். பீற்றர்ஸ் தேவாலய சேமக்காலையில் அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இது இவ்வாறு இருக்கையில் குறித்த நபர் மீதான வழக்கு மன்னார் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபர் அங்கு பிரசன்னமாகவில்லை. குறித்த நபர் உயிரிழந்து, அவரது சடலம் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட விடயம் அதன்பின்னரே நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அந்தவகையில் சடலத்தை புதைத்த பகுதி மல்லாகம் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ளமையால் இது குறித்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் குறித்த நபரின் சடலத்தை இன்று தோண்டி எடுத்து உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்தவகையில் இன்று குறித்த நபரின் சடலம் மல்லாகம் நீதிமன்ற நீதிவான், சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகளின் முன்னிலையில் தோண்டப்படவுள்ளது. (ம-7)

## கிணற்றிலிருந்து...

வயலுக்குப் பசளை இடச் சென்றவர்கள் மேற்படி சடலத்தைக் கண்ட நிலையில் இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி பெண் கிணற்றுக்குள் விழுந்து 5 தினங்கள் கடந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,30)

## இளைஞனின்...

யைச் சேர்ந்த சுப்பிரமணியம் அரவிந்த் (வயது-33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உயிரிழப்புத் தொடர்பான விசாரணையை கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## கிளி...

சசிகரன் சிம்புதரன் (வயது-21) என்ற இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, பரந்தன் -முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள புளியம்பொக்கணை 10ஆம் கட்டை பாலத்திற்கு அடியில் இருந்து இரு இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இரண்டு சடலங்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஸ்மாத் ஜெமில் பார்வையிட்டு உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் இறந்தவர்களிடமிருந்து 71,ஆயிரத்து நூறு ரூபாய் பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் உட்பகுதியில் விழுந்ததன் காரணமாக இருவரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 5704
V 2 8 1 1 1 1
அத சம்பத V 1 1 1 1
சீட்டிழுப்பு இலக்கம் 279

தன நிதானய
திகதி -2025.01.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1734
D 25 44 75 81 D
84601

மெகா பவர்
திகதி 02/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2052
J 14 05 16 61 74

லக்கி 7 VIP
திகதி 2025.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 530
A 8 8 6 5 8 4 A

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3946
சீட்டிழுப்பு திகதி 02.01.2025
A 31 48 55 59
A

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்.
சீட்டிழுப்பு திகதி 2025.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 1013
கும்பம் 02 04 19 54 கும்பம்
03924 11

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.01.2025 வெற்றி வாரம் 412
V 2 2 9 2 1 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,372,884.80
96177

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2678
சீட்டிழுப்பு திகதி 2025.01.02 தினம் வியாழக்கிழமை
22 55 58 64 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,522,041.60

சனிதா
திகதி 02.01.2025 வெற்றி வாரம் 4839
40 49 50 54 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,495,659.20
88697

சசிரி
591
02.01.2025
வியாழக்கிழமை
11 36 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4390
சீட்டிழுப்பு திகதி 02.01.2025 தினம் வியாழக்கிழமை
03 35 41 48 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,459,643.60
132005

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 40 04 17 33 35
1854
02.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.560,572,553.00

வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2504
2025.01.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,385,290.40
ADA KOTIPATHI
02 20 44 76 P
595424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடின...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்றில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"இந்நாட்டின் பொருளாதாரம் இன்று மிகவும் நெருக்கடியான நிலையில் காணப்படுகின்றது. விழுந்த இடத்தில் இருந்து எழுந்து நாட்டை மீட்க அனைவரும் உறுதியுடன் இருக்க வேண்டும்.

ஒரு குடும்பமாக உழைக்கும் போது, குடும்ப முன்னேற்றத்திற்காக சில முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஆனால், அந்த முடிவுகள் குடும்ப நலனுக்காக எடுக்கப்பட வேண்டும். குடும்ப நலமே தங்கள் நலம் என்பதை குழந்தைகள் ஒரு நாள் புரிந்து கொள்வார்கள்.

அவ்வாறே நாட்டின் நலன் கருதி எடுக்கும் தீர்மானங்கள் சில நேரம் நமக்கு கஷ்டமாக இருந்தாலும் அதனை பழகிக்கொள்ள வேண்டிவரும். அது குறித்து யாரும் தப்பான அபிப்பிராயங்களை மேற்கொள்ள வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியா...

ரையாடப்பட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

295 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையமானது, சில அரசியல் தலையீடுகள் மற்றும் இனம் சார்ந்த பிரச்சினைகளாலும், வியாபாரிகள் அல்லது தனிப்பட்ட நலனை முன்னிறுத்தியமை போன்றவற்றினால் அதனை ஆரம்பிப்பதற்கு தற்போது வரை ஒரு இழுபறி நிலை காணப்படுகின்றது.

மேலும் இது தொடர்பாக பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை அரசாங்க அதிபரினால் முன்னெடுக்கப்பட்ட போதும் அதனை திறக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே அடுத்த மாத நடுப் பகுதியிலே இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிபரும் இணைந்து இது தொடர்பாக கலந்துரையாடுவதுடன், இப்பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பதற்கான நடவடிக்கையினை அடுத்த அபிவிருத்திக் குழு கூட்டத்தில் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பதற்கான நடவடிக்கைக்கு சம்மந்தப்பட்ட அனைவரையும் அழைத்து கலந்துரையாடுவதன் மூலமாக இதற்கான தீர்வினை இலகுவாக எடுக்க ஏதுவாக இருக்கும் என தெரிவித்திருந்தார். (ம-7,250)

## எட்டு மாத...

தாய் இரு நாட்களுக்கு முன் சந்தேக நபரான கணவரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிள்ளையின் கற்றல் நடவடிக்கையில் ஏற்பட்ட வாக்குவாதம் வன்முறையாக மாறி கொலையில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாயை, தந்தை தாக்குவதை அவதானித்த இரண்டாம் தரத்தில் கல்வி கற்கும் பிள்ளை அயலவர்களின் உதவியை நாடியுள்ளது.

விரைந்து செயற்பட்ட அயல்வீட்டவர்கள் வைத்தியசாலையில் அனுமதித்த போதும், குறித்த பெண் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் 33 வயதுடைய சந்தேக நபரான கணவரைக் கைது செய்துள்ளனர்.

சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## கஞ்சாவுடன்...

தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோரன்பற்று பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரும் தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபருமே கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து 23 கிலோ 165 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

**IELTS - 04.01.2025 New Batch ஆரம்பம்**
(Academic - General and Life Skil A1)
இத்துடன் Basic & Advance English Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
By : B.MURALI - 077 798 9830
(2899)

**மலிவு விலையில்**
பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.
076 315 6470
(C-1934)

**யோக்கட் கொள்வனவுகள்**
பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
48/= 80/=
Happy Supermarket
உரும்பிராய்
077 121 5546 / 077 780 8030
(505)

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 09 - 1947



இறப்பு 02 - 01 - 2025

## திருமதி இந்திராணி செல்வரத்தினம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி செல்வரத்தினம் நேற்று 02.01.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் விசாகன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் - மாந்தை கிழக்கு பிரதேச சபை), சுகிதா, கவிதாசினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சங்கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், யாழ்ப்பாணம்), நேசராஜா (X - கதிராளர், பொது வைத்திய சாலை, திருகோணமலை), பகீதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாய்னி, சாய்லக்ஷயன், ஸ்ரீசாய்பல்லவி, கிருத்திக், தன்விகா, சாய்பிறிரி, சாய்நிகிஷா, சாய்சரண் ஆகியோரின் பேர்த்தியும் அமரர் லோகேந்திரன், அமரர் பூபதி, தெய்வேந்திரன், இந்திரலீலா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 03.01.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 356 0429
077 727 9158
(2900)

**V2 VISA SERVICES**
**கனடா Visit Visas**
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1933)

**தேவை**
யாழ். நகர் மத்தியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் தயாரிக்கக் கூடியவர் மற்றும் சமையல் உதவியாளர் உடன் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை, வேலையின் தரம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.
077 873 8834
(504)

**காணி, வீடு விற்க வாங்குவதற்கு**
காணிகள், வீடுகள், வியாபார நிலையங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் நம்பிக்கையான இடம்.
உங்களின் ஒரே தெரிவு
"Easy Real Estate"
076 742 4301, 075 710 9639
Whatsapp :- +00 94 75 710 9639, Viber :- +00 94 71 964 6619
(2898)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.12.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர்

## செல்லம்மா அரியரத்தினம்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 03.01.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்
(2897)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org